DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC–39/2023

Prosecution witness – PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.வில்வதுரை | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present.)

03.03.2026 – 01.00 PM

முதல் விசாரணை:–

1. நான் கடலாடி கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். பட்டியல் சாட்சிகள் 2 முதல் 4 ஐத் எனக்கு தெரியும். எனது மனைவி மற்றும் மகன் ஆவார்கள்

2. கடந்த 23.02.2024ம் தேதி இரவு 09.00 மணியளவில் வாலிநோக்கம் போலீசார் எதிரி செந்துாரான் கையில் மதுபாட்டில்களுடன் பிடித்துள்ளார்கள். மலட்டாறு ஒயின்ஷாப்பில் எனது தம்பி மாரிமுத்து சொல்லி கொடுத்து தான் எதிரியை போலீசார் பிடித்ததாக எதிரி எனது தம்பியுடன் தகராறு செய்துள்ளார். 25.02.2023ம் தேதி காலை 08.00 மணியளவில் நான் எனது தோட்டத்தில் இருந்த போது எதிரியின் மகன் எனது தம்பிக்கு போன் செய்து சமாதானம் பேசுவதற்காக அழைத்துள்ளார். எனது தம்பி என்னை போன் மூலம் தொடர்பு கொண்டு விவரங்களை கூறினார். நான் கடலாடியிலிருந்து ஆலங்கும் செல்லும் ரோட்டில் எதிரி மதுபோதையுடன் எனது தம்பி மாரிமுத்துவிடம் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்.

3. நான் இரண்டு பேரையும் சமாதானம் செய்வதற்காக முயற்சி செய்தேன். எதிரி கல்லை கொண்டு என்னை தலையில் அடித்தார். நான் உடனடியாக மயக்கம் அடைந்து கீழே விழுந்துவிட்டேன் என்னை கடலாடி காவல்நிலையத்திற்கு துாக்கி கொண்டு சென்றுவிட்டார்கள் யார் என்று எனக்கு

தெரியாது. பின்னர்க கடலாடி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றேன். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்தேன். போலீசார் காவல் நிலையத்தில் வைத்து இந்த சம்பவம் தொடர்பாக புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். பின்னர் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மதுரை தேவதாஸ் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்து 5 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

நான் காவல்நிலையத்தில் தான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரிதான். அதன் பிறகு கடலாடி மருத்துமனையில் வைத்தும் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரிதான். கடலாடி காவல் நிலையத்தில் புகார் வாக்குமூலம் கொடுத்த போது சுமார் 08.30 மணி இருக்கும். கடலாடி மருத்துவமனையில் புகார் வாக்குமூலம் கொடுத்த எத்தனை மணி இருக்கும் என்றால் அதே 08.00 – 08.30 மணி இருக்கும். எதிரி எனது தம்பியை தான் கல்லால் அடிக்க வந்தார் என்றால் என்னை தான் அடித்தார். நான் சம்பவ இடத்தில் மயக்கம் அடைந்து விட்டேன் என்றால் சரிதான்.

என்னை யார் காவல்நிலையத்திற்கு தூக்கி சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. போஸ் என்பவர் தான் தூக்கி சென்றதாக கேள்விபட்டேன். காவல் நிலையத்தில் வாக்குமூலம் வாங்கியவர்கள் யார் என்றால் காவல் ஆய்வாளர் திருமதி.ஜான்சிராணி வாங்கினார். கடலாடி மருத்துவமனையில் யார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் மருத்துவமனையில் யாரும் வாங்கவில்லை. சம்பவம் இடத்திற்கு அருகே தான் எதிரி வீடு உள்ளது என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சிகள் 2 தம்பி, 3. மகன், 4. எனது சம்மந்தி என்றால் சரிதான். எனது வீடு சம்பவ நேரத்தில் கடலாடி கருங்குளத்தில் உள்ளது என்றால் கடலாடியில் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு நாங்கள் நான்கு பேர்கள் சென்றோம் என்றால் சரியல்ல. செந்துாரான் எனது தம்பியும் இருந்தார்கள். நான் மட்டும் தான் சென்றேன்.

நான் புகார் கொடுப்பதற்கு முன்னரே எதிரி என்னையும், எனது தம்பி மற்றும் மகன் மீதும் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் தான் முதலில் புகார் கொடுத்தேன். எதிரி என் மீது புகார் கொடுத்ததால் சமாதானம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் நான் அவர் மீது புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை தான் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில சொன்ன விதத்தில் சம்பவம் ஏதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.03 16:44:48 +0530